ராக ஆகி இருக்கிறார்கள். எத்தனையோ பேர் ஏதேதோ சொல்லிப் பார்த்தார்கள். கங்கை ஆறு வடக்கிலே பிறக்கிறது. காவிரி ஆறு குடகு மலையிலே பிறந்து தமிழகத்திலே தவழ்ந்து ஓடி, கடலிலே கலக்கிறது. கங்கை ஆறும் கடலிலே கலக்கிறது. காவிரி ஆறும் கடலிலே கலக்கிறது. கோவையிலே ஓடும் நொய்யலாறு மேற்குத் தொடர்ச்சி மலையிலே உருவாகி, அது தமிழகத்தில் உருண்டோடி கடலிலே கலக்கிறது. கடலிலே கலக்கும் தண்ணீரை எல்லாம் தனியாக இது கங்கை ஆற்றுத் தண்ணீர்; இது காவிரி ஆற்றுத் தண்ணீர், இது நொய்யலாற்றுத் தண்ணீர் என்று பிரிக்க முடியாது. அதைப்போலத்தான் தமிழகத்திலே இருக்கிற இந்துவாகட்டும், கிறிஸ்தவராகட்டும், முஸ்லீம் ஆகட்டும், அத்தனை பேரும் ஓர் இன மக்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அத்தனை பேருடைய உடலிலே இருக்கிற ரத்தத்தை அவர்கள் கையை அறுத்தால் கொட்டுகின்ற குருதி அத்தனையும் இந்துவாக இருந்தால் சிவப்பாகவும், முஸ்லீம்மாக இருந்தால் கருப்பாகவும், கிறிஸ்தவராக இருந்தால் வெள்ளையாகவும் இருப்பதில்லை. அத்தனை பேருக்கும் ஒரே ரத்தம்தான். அந்த ரத்தத்திற்குச் சொந்தக்காரர் நம்முடைய புரட்சித் தலைவி என்பதைக் கூறி, இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று விடை பெறுகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் நிறைய மாண்புமிகு உறுப்பினர்கள் பேசவேண்டும் என்று விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு எல்லா உறுப்பினர்களும் பேசி, நாளை பதிலுரை வைத்துக் கொள்ளலாம் என்று சொன்னாலும் கூட, 3 அல்லது $3\frac{1}{2}$ மணி ஆகிவிடும் என்று கருதுகிறேன். எனவே, நாளை விவாதம் தொடரலாம் எனக் கருதுகிறேன். நாளை திரு. தம்புசாமி அவர்கள் தொடங்கி எஞ்சிய உறுப்பினர்கள் பெயர் கொடுத்தவர்கள் மட்டும் பேசி முடிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

7. விதி 110-ன்கீழ் வருவாய்த் துறை அமைச்சரின் அறிக்கை. கிராம அலுவலர்களின் கோரிக்கைகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன் கீழ் பேரவைக்கு ஓர் அறிக்கையை அளிக்க வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. இப்போது அந்த அறிக்கையைப் பேரவைக்கு வெளியிடுவார். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம உதவியாளர்கள் தங்களுடைய கோரிக்கையை வைத்துப் போராட்டத்திலும், வேலை நிறுத்தத்திலும் ஈடுபட்டனர். தமிழ்நாடு கிராம உதவியாளர்கள் மாநில சங்கத்தினர் திருச்சியிலிருந்து நடை

பயணமாக வந்து மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களிடத்தில் தங்களுடைய கோரிக்கை மனுவை 16-3-1993 ஆம் நாளன்று தலைமைச் செயலகத்திலே கொடுத்தார்கள். அவர்களுடைய கோரிக்கை மனுவை அனுதாபத்துடன் ஆய்வு செய்யுமாறு தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் கட்டளை இட்டார்கள். அதன்படி கிராம உதவி யாளர்கள் சங்கத்துடனும், மற்றவர்களுடனும், நேரிடையாகப் பேசப்பட்டது. மற்றும் தலைமைச் செயலாளர், முதன்மை வருவாய் நிர்வாக ஆணையாளர்கள், வருவாய்த்துறைச் செய லாளர், நிதித் துறைச் செயலாளர் ஆகியோரும் சங்க நிர்வாகி களை அழைத்துப் பேசினார்கள். புரட்சித் தலைவி அவர்கள் மீது நம்பிக்கை வைத்து, கிராம உதவியாளர்கள் வேலை நிறுத்தத்தை 8-4-1993 அன்று கைவிட்டு விட்டு வேலைக்குத் திரும்பி விட்டார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (13-4-1993) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-09 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

158. 1991-92 ஆம் ஆண்டிற்கான மருதுபாண்டியர், போக்குவரத்துக் கழகத்தின் பத்தாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்.)

159. 1991-92 ஆம் ஆண்டிற்கான சோழன் போக்குவரத்துக் கழகத்தின் இருபத்தியோராவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

160. 1991-92 ஆம் ஆண்டிற்கான தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தின் ஏழாவது ஆண்டறிக்கை 1/1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்.)